# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 21/ந/2018

ஆணை எண். 24/2018

நாள் : 13/02/2018

திரு K. பாலசுப்ரமணியம்,
திருச்செங்கோடு – 637 209.

– முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
திருச்செங்கோடு நகராட்சி,
திருச்செங்கோடு.

– எதிர் மனுதாரர்

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, சீத்தராம்பாளையம் எண்:126/4, இராயல் நகர் முகவரியில் வசிக்கும் திரு K. பாலசுப்ரமணியம் அவர்களின் 27.01.2018 நாளெண்ணிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 31.01.2018 அன்று பெறப்பட்டு, 021/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களை பரிசீலித்து கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, சீத்தராம்பாளையம் எண்.126/4, இராயல் நகர் முகவரியில் வசிக்கும் திரு K. பாலசுப்ரமணியம் என்பவர், மேற்குறிப்பிட்ட முகவரியிட்ட வீட்டில் சேரும் திடக்கழிவுகளை. திருச்செங்கோடு நகராட்சி நிர்வாகம் தினமும் சேகரிக்க ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். நகராட்சிப் பகுதிகளில் உள்ள தெருக்கள் மற்றும் குடியிருப்பு போன்ற பகுதிகளில் சேரும் திடக்கழிவுகளை சேகரித்து அப்புறப்படுத்துவது நகராட்சியின் முக்கியப்பணி. நகராட்சி துப்புரவுப் பணியாளர்கள் குப்பை வண்டிகளுடன் வரும் பொழுது தங்களது இல்லங்களில் சேரும் கழிவுகளை குடியிருப்பு வாசிகள் துப்புரவுப் பணியாளர்களிடம் வழங்குவது அல்லது அத்தெரு ஓரங்களில் வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளில் போடுவதும் வழக்கமான நடைமுறை. திடக்கழிவு குப்பைகளை சேகரிப்பதும் அகற்றுவதும் நகராட்சியின் அன்றாட நடவடிக்கையாக இருப்பினும், இந்நேர்வு சம்பந்தப்பட்ட முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்து மனுதாரர் வசிக்கும் இல்லத்தில் சேரும் திடக்கழிவுகளை அகற்ற ஆணையிடக்கோரியுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள வீட்டிற்கான சொத்துவரி திரு எம். கந்தசாமி என்பவர் பெயரில் தாக்கலாகி உள்ளது. வீட்டின் உரிமையாளரான திரு எம். கந்தசாமி என்பவரிடமிருந்தும் மற்றும் அவ்வீடு அமைந்துள்ள தெருவில் உள்ள பிற வீட்டு உரிமையாளர்களிடமிருந்தும் இதுமாதிரியான புகார் எதுவும் வரப்பெறப்படவில்லை. எனினும், திடக்கழிவுகளை அகற்றுவது சம்பந்தமாக நகராட்சி மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைக் குறித்து திருச்செங்கோடு நகராட்சி மன்றம் 28.02.2017 நாளன்று 6– எண்ணிட்ட தீர்மானத்தினை நிறைவேற்றி திடக்கழிவு மேலாண்மை துணை விதிகளுக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. நகராட்சி மன்றம் தீர்மானித்துள்ள நடைமுறையினைப் பின்பற்ற நகராட்சித் துப்புரவுப் பணியாளர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்குமாறு, திருச்செங்கோடு நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 13–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 15/2/18

15/2/18

15/2/18

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
திருச்செங்கோடு நகராட்சி,
திருச்செங்கோடு.

2. திரு K. பாலசுப்ரமணியம்,
126/4, ராயல் நகர்,
சீத்தாராம் பாளையம் அஞ்சல்,
திருச்செங்கோடு – 637 209.
நாமக்கல் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்